# கலை மற்றும் அறிவியல் புலம்

## தமிழ்த்துறை

### பாரதியார் பிறந்த தினம் நிகழ்வு - அறிக்கை

| | | |
|---|---|---|
| நிகழ்வின் தலைப்பு | : | பாரதியார் பிறந்த தினம் |
| நாள் | : | 11.12.2023 |
| இடம் | : | தமிழ்த்துறை |
| பங்கேற்பாளர்களின் எண்ணிக்கை | : | 12 |

விநாயகா மிஷன்ஸ் ஆராய்ச்சி நிறுவனம் - கலை மற்றும் அறிவியல் புலத்தின் தமிழ் துறையில் பாரதியாரின் 141 வது பிறந்தநாள் விழா டிசம்பர் 11/ 12 /2023 அன்று பிற்பகல் 12:30 மணியளவில் இயக்குநர் Dr. T.H.நசீமா அம்மையார் அவர்களின் தலைமையில் இனிதே துவங்கியது. இயக்குநர் அம்மா அவர்கள் மகாகவி பாரதியாரின் திரு உருவப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செய்தார். அதனைத் தொடர்ந்து தமிழ்த்துறைப் பேராசிரியர்களும், பிற துறையைச் சார்ந்த பேராசிரியர்களும் மகாகவி பாரதியாரின் திருவுருவப்படத்திற்கு மலர் தூவி மரியாதைச் செய்தனர்.

இந்நிகழ்வில் மகாகவியின் கவிதைகள், சிறப்புகள் குறித்து தமிழ்த்துறை பேராசிரியர் திரு.சு.பழனியப்பா அவர்கள் பகிர்ந்து கொண்டதோடு அவரின் கவிதையைப் பாடலாகவும் பாடி மகிழ்ச்சிப்படுத்தினார் . தமிழ்த்துறைத்தலைவர் முனைவர் ப.ஜெயபாரதி அம்மையார் அவர்கள் பாரதியாரின் வாழ்க்கை வரலாறு, தாய்மொழி பற்று, பாரதியார் பொது வாழ்க்கைக்காக தனது குடும்ப வாழ்க்கையில் ஏற்ற இடர்பாடுகளையும் அவர் கால கட்ட சமுதாய சூழலையும் பெண்களுக்காகவும் சமுதாயத்திற்காகவும் அவரின் படைப்புகள் ஏற்படுத்திய கிளர்ச்சியையும் அவர் காலகட்டத்தில் இருந்த மூடநம்பிக்கைகளையும் ஏற்றத்தாழ்வுகளையும் அவர் பாடல் வழி சாடியுள்ளதையயும் எடுத்துரைத்தார். இவ்வுலகில் குறைந்த ஆண்டுகளே வாழ்ந்தாலும் அவரின் படைப்புகளின் வழியில் மக்கள் மனதில் நீங்கா இடம் பெற்ற மகாகவியாக அனைவரும் அறியக்கூடிய கவிஞராக பாரதியார் திகழ்கிறார் என்று கூறி, அனைவரும் இந்நன்னாளில் அவரை நினைவு கூர்ந்து வணங்க வேண்டும் என்று தனது கருத்துக்களை அனைவரிடமும் பகிர்ந்து கொண்டார்.

இந்நிகழ்வின் நிறைவு பகுதியில் அனைவருக்கும் இனிப்புகள் வழங்கப்பட்டு இவ்விழா இனிதே நிறைவுற்றது.


GPS Map Camera
Chengalpattu, Tamil Nadu, India
SAS, VMRF, CHENNAI CAMPUS, PAIYANOOR,Tamil Nadu 603104, India
Lat 12.656715°
Long 80.179797°
11/12/23 01:07 PM GMT +05:30
Google




GPS Map Camera
Chengalpattu, Tamil Nadu, India
SAS, VMRF, CHENNAI CAMPUS, PAIYANOOR,Tamil Nadu 603104, India
Lat 12.656715°
Long 80.179797°
11/12/23 01:15 PM GMT +05:30
Google


GPS Map Camera
Chengalpattu, Tamil Nadu, India
SAS, VMRF, CHENNAI CAMPUS, PAIYANOOR,Tamil Nadu 603104, India
Lat 12.656715°
Long 80.179797°
11/12/23 01:24 PM GMT +05:30
Google